**கொழும்புப் பல்கலைக்கழகம் - இலங்கை**

**கலைப்பீடம்**

**சிறப்புக் கலைமாணிப் பரீட்சை பகுதி (I)**

முதலாம் பருவ இறுதிப் பரீட்சை - 2018

# GYG 2127 - குடித்தொகைப் புவியியல்

நேரம் : 02 மணித்தியாலம்

எவையேனும் மூன்று (03) வினாக்களுக்கு மட்டும் விடை தருக

---

(1)

(i) கீழ் குறிப்பிட்ட கருவளவீத அளவைகள் இரண்டும் குறிப்பிட்ட காலப்பகுதி ஒன்றின் கருவளத்தை அளவிடுவதில் நம்பிக்கை அடிப்படையில் எவ்வாறு வேறுபடுகின்றது?

(அ) மொத்தக்கருவள விகிதம்

(ஆ) பருமட்டான பிறப்பு விகிதம்

(06 புள்ளிகள்)

(ii) இடம்சார் அடிப்படையில் பிறப்பு விகிதத்தில் காணப்படும் வேறுபாடுகளுக்கு பொறுப்பான காரணிகளைப் பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக?

(14 புள்ளிகள்)

(2)

(i) பொருத்தமான புனையா வரைபடம் ஒன்றின் உதவியுடன் குடிப்புள்ளியியல் நிலைமாறு மாதிரியின் (The Demographic Transition Model) பிரதான காலகட்டங்களைச் சுருக்கமாக விளக்குக.

(06 புள்ளிகள்)

(ii) வினா (i) இல் குறிப்பிட்ட காலகட்டங்கள் ஒவ்வொன்றினதும் குடிப்புள்ளியியல் அம்சங்கள் குடித்தொகை கூம்புகளின் (Pyramid) பண்புகளுடன் எவ்வாறு தொடர்புபடுகின்றது என்பதனைப் பொருத்தமான விளக்கப்படங்களுடன் விரிவாக ஆராய்க?

(14 புள்ளிகள்)

(3)

(i) இடப்பெயர்வு எனும் பதத்தினை வரையறை செய்க.

(06 புள்ளிகள்)

(ii) ரெனிஸ் இடப்பெயர்வினை பற்றி குறிப்பிடுகையில் "இது சமூக, பொருளாதார மற்றும் பண்பாட்டுக் காரணிகளால் உந்தப்படுகின்ற ஒரு செயற்பாடு" என்கிறார். இக் கூற்றினை உந்துதல் மற்றும் இழுத்தல் (push and pull factors) காரணிகளின் உதவியுடன் விளக்குக.

(14 புள்ளிகள்)

(4) ஒரு நாட்டின் சமூக மற்றும் பொருளாதாரக் கட்டமைப்புக்களில் வயது மற்றும் பால் விகிதமும் சில வகையான தாக்கங்களைச் செலுத்துகின்றது" இதனைப் பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.

(20 புள்ளிகள்)

(5)

(i) "பட்டினவொருக்கங்களினால் ஏற்பட்ட பெருநகர்கள் பல அண்மைய காலங்களில் விருத்தியுற்றிருக்கின்றன" இதன் அடிப்படையில் பெருநகரம் (Metropolition City) எனும் பதத்தினை வரையறை செய்க.

(04 புள்ளிகள்)

(ii) உலக நகரமயமாக்கப் பாங்குகளில் விரைவான நகரமயமாக்கத்தினைக் கொண்டனவாக ஆசிய நாடுகளே காணப்படுவதுடன் பல்வேறுபட்ட சமூக, பொருளாதார மற்றும் சூழலியல் பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்கின்றன" இக் கூற்றுடன் உடன்படுகின்றீரா? பொருத்தமான உதாரணங்களுடன் ஆராய்க.

(16 புள்ளிகள்)

(6) "அதிகரித்து வரும் உணவு நெருக்கடியானது விரைவான குடித்தொகை வளர்ச்சியின் விளைவாக உருவாகியுள்ள பிரச்சினையாகும்" பொருத்தமான உதாரணங்களுடன் உமது விடையினை நியாயப்படுத்துக.

(20 புள்ளிகள்)